பிரஸார் பாரதி

இந்திய வானொலி, சென்னை-4

28 05 2024 **TUESDAY** 12 40 **PM**

வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. மக்களவைக்கான ஏழாவது மற்றும் இறுதிக்கட்ட வாக்குப்பதிவு வரும் ஒன்றாம் தேதி நடைபெறவுள்ள நிலையில், அரசியல் கட்சித்தலைவர்கள் தீவிர பிரச்சாரம் மேற்கொண்டு வருகின்றனர்.

2. மேற்குவங்கம் மற்றும் அஸ்ஸாம் மாநிலங்களில் ரெமல் புயல் காரணமாக, இதுவரை ஆறு பேர் உயிரிழந்துள்ளனர்.

3. சுதந்திரப் போராட்ட வீரர் வீர்சாவர்கர் பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

4. பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திரமோடி வரும் 30ஆம் தேதி கன்னியாகுமரி வருகிறார்.

5. பிரெஞ்ச் ஓப்பன் டென்னிஸ் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் ரோஹன் போபண்ணா, யூகி பாம்ரி ஆகியோர் பங்கேற்கின்றனர்.

>>>><<<<

மக்களவைக்கான ஏழாவது மற்றும் இறுதிக்கட்ட வாக்குப்பதிவு வரும் ஒன்றாம் தேதி நடைபெறவுள்ள நிலையில், அரசியல் கட்சித்தலைவர்கள் தீவிர பிரச்சாரம் மேற்கொண்டு வருகின்றனர்.

பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி, ஜார்க்கண்ட் மாநிலத்தில் இன்று பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

பிஜேபி தலைவர் திரு. ஜெ.பி. நட்டா, காங்கிரஸ் மூத்த தலைவர் திரு. ராகுல் காந்தி ஆகியோர் தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் பங்கேற்கவுள்ளார்.

ஜார்க்கண்ட் மாநிலத்தின் 3 மக்களவைத் தொகுதிகளில் வரும் ஒன்றாம் தேதி வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

மேற்குவங்கம் மற்றும் பீகார் மாநிலங்களில் அரசியல் கட்சித் தலைவர்கள் பிரச்சாரக் கூட்டங்களிலும் பேரணிகளிலும் பங்கேற்கின்றனர்.

இந்த நிகழ்ச்சிகளில் பீகார் மாநில முதலமைச்சர் திரு. நிதிஷ்குமார், ராஷ்ட்ரீய ஜனதா தள் தலைவர் திரு. தேஜஸ்வி பிரசாத் யாதவ், உத்தரபிரதேச மாநில முதலமைச்சர் யோகி ஆதித்யநாத், சமாஜ்வாதி கட்சித் தலைவர் திரு. அகிலேஷ் யாதவ் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

>>>><<<<

மேற்குவங்கம் மற்றும் அஸ்ஸாம் மாநிலங்களில் ரெமல் புயல் காரணமாக, இதுவரை 6 பேர் உயிரிழந்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

புயல் கரையை கடந்த போதிலும் பல மாவட்டங்களில் தொடர்ந்து மழை பெய்து வருவதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

தெற்கு மற்றும் வடக்கு பர்கானா மாவட்டங்களில் கடல் நீர் ஊருக்குள் புகுந்ததை அடுத்து வெள்ளம் ஏற்பட்டிருப்பதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

மழை-வெள்ளம் குறைந்த பகுதிகளில் தற்காலிக முகாம்களிலிருந்து மக்கள் வீடு திரும்பி வருவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், இறுதிகட்ட தேர்தலை எதிர்நோக்கியுள்ள 24 பர்கானா மாவட்டங்களில் வாக்கு சேகரிப்பு தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

அடுத்த மாதம் 1ஆம் தேதி 9 தொகுதிகளில், மக்களவை தேர்தலுக்கான வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

இதனிடையே, அஸ்ஸாமின் பல பகுதிகளில் கனமழை பெய்து வருவதுடன், சூறாவளிக் காற்று வீசுவதால், பெரும்பாலான பகுதிகளில் மின்இணைப்பு துண்டிக்கப்பட்டிருப்பதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

பக்ஷா, கச்சார், சிராங் உள்ளிட்ட ஏழு மாவட்டங்களில் அதிகனமழை பெய்யக்கூடும் என்றும், பஜாலி, பார்பட்டா உள்ளிட்ட 8 மாவட்டங்களில் கனமழை பெய்யும் என்றும் வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

இதனால், அஸ்ஸாமிற்கு செல்லும் ரயில்கள் ரத்து செய்யப்பட்டுள்ளதாகவும், பள்ளிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

பிரம்மபுத்திரா நதியில் படகுப் போக்குவரத்து தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறுகிறார்.

மாவட்ட நிர்வாகங்கள் அனைத்தும், மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வசதியாக 24 மணிநேரமும் இயங்கும் கட்டுப்பாட்டு மையங்களை தொடங்கி வைத்திருப்பதாகவும், மாநில மற்றும் தேசியப் பேரிடர் மீட்புப் படையினர் தயார்நிலையில் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>><<<<

சுதந்திரப் போராட்ட வீரர் வீர்சாவர்கர் பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி, பிரதமர் திரு. நரேந்திர மோடி விடுத்துள்ள செய்தியில், தாய்நாட்டிற்காகவும், மக்களுக்காகவும் தனது வாழ்வை அர்ப்பணித்து சேவையாற்றியவர் வீர்சாவர்கர் என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

தமிழக ஆளுநர் திரு. ஆர்.என். ரவி, உதகையில் உள்ள அவரது மாளிகையில் வீர்சாவர்களின் உருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

>>>><<<<

2024ஆம் நிதியாண்டிற்கான நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 6 புள்ளி 7 சதவீதமாக இருக்கும் என்று சர்வதேச நிதி நிறுவனமான **Goldmansachs** அறிவித்துள்ளது.

உலக அளவில் முதலீடுகளை மேற்கொள்ளும் இந்த நிறுவனம், இந்தியாவின் நிதி வளர்ச்சி நிலைத்த தன்மை கொண்டிருப்பதாக கூறியுள்ளது.

ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான காலத்தில் பொருளாதார வளர்ச்சி நிலையானதாக இருந்ததாகவும், பணவீக்க விகிதம் குறைந்திருப்பதாகவும் அந்த நிறுவனம் கூறியுள்ளது.

நடப்பு நிதியாண்டில் பருவமழை காலத்தின் போது அதிக மழை பெய்யும் என்று கூறப்பட்டுள்ள நிலையில், வேளாண் துறை வளர்ச்சி அதிகரிக்கும் என்று கருதப்படுகிறது.

இந்த அறிவிப்புக்குப் பின்னர், பொருளாதார வளர்ச்சி குறித்த அறிக்கையை **Goldmansachs** நிறுவனம் வெளியிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

>>>><<<<

தில்லி முதலமைச்சர் திரு. அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு வழங்கப்பட்டுள்ள ஜாமீனை நீட்டிக்க உச்சநீதிமன்றம் மறுத்துள்ளது.

தற்காலிக ஜாமீன் வழங்கப்பட்டுள்ள வழக்கில், ஏழு நாட்கள் அவகாசம் கேட்டு தாக்கல் செய்யப்பட்ட மனுவை, அவசர வழக்காக விசாரிப்பதற்கு உச்சநீதிமன்றம் மறுத்துவிட்டது.

மருத்துவ காரணத்திற்காக சில பரிசோதனைகளை மேற்கொள்ளவுள்ளதால், ஏழு நாட்கள் அவகாசம் கேட்டு அவசர வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு குறித்து உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட் முடிவெடுப்பார் என்று நீதிமன்றம் தெரிவித்திருப்பதாக பிடிஐ செய்தி நிறுவனம் கூறியுள்ளது.

>>>><<<<

பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திரமோடி, தமிழகத்தில் வரும் 30ஆம் தேதி முதல் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

திருவனந்தபுரத்திலிருந்து ஹெலிகாப்டர் மூலம் கன்னியாகுமரி வரும் அவர், அன்று மாலை விவேகானந்தர் மண்டபத்தில் தியானம் மேற்கொள்ளவுள்ளார்.

மூன்று நாட்கள் தியான நிகழ்ச்சிகளுக்குப் பின்னர், அங்கிருந்து திருவனந்தபுரம் செல்லவிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதனையடுத்து, அங்கு பாதுகாப்பு அதிகாரிகள், பிரதமரின் நிகழ்ச்சி தொடர்பான பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை நடத்தி வருகின்றனர்.

>>>><<<<

புதுதில்லியிலிருந்து வாரணாசி செல்லவிருந்த இண்டிகோ விமானத்தில் வெடிகுண்டு இருப்பதாக கிடைத்த தகவலை அடுத்து அந்த விமானம் உடனடியாக தரையிறக்கப்பட்டது.

விமானத்தில் இருந்த பயணிகள் அனைவரும் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டதாக இண்டிகோ நிறுவனம் கூறியுள்ளது.

விமானம் தரையிறக்கப்பட்டதும், பாதுகாப்புத் துறையை சேர்ந்த அதிகாரிகள் அங்கு விரைந்தனர்.

வெடிகுண்டு நிபுணர்கள் விமானத்தின் அனைத்து பகுதிகளிலும் சோதனை மேற்கொண்டு வருகின்றனர்.

>>>><<<<

உலக கடற்பசு பாதுகாப்பு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

கடல்வாழ் உயிரினங்களில் சிறப்பு வாய்ந்த கடற்பசு அரியவகை இனத்தைச் சார்ந்ததாகும்.

கடல்பாசிகளை மட்டுமே உட்கொள்ளும் இந்தவகை உயிரினம், இந்தியா, கிழக்கு ஆப்பிரிக்கா, பசிபிக் தீவுகளில் வாழ்கின்றன.

மருத்துவ காரணங்களுக்காக கடற்பசு அதிக அளவில் வேட்டையாடப்படுவதாகவும், அரியவகை உயிரினம் என்பதால் அதனை பதுகாப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் உலக நாடுகள் வலியுறுத்தியுள்ளன.

இந்திய கடல் பகுதிகளிலும் இந்த அரியவகை கடற்பசு பாதுகாக்கப்பட வேண்டும் என்று மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் வலியுறுத்தியுள்ளது.

கடல் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள நிபுணர்களும், ஆராய்ச்சியாளர்களும் புதுதில்லியில் நடைபெறும் கடல்சார் பாதுகாப்பு மாநாட்டில் இன்று ஆலோசனை மேற்கொள்கின்றனர்.

இந்த கருத்தரங்கில் உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த ஆய்வாளர்கள் ஆன்லைன் மூலம் தங்களது கட்டுரைகளை சமர்ப்பிக்கவுள்ளதாக இந்திய வன உயிரியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

>>>><<<<

மாதவிடாய் ஆரோக்கிய தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

மகளிருக்கு மாதவிடாய் காலங்களின் போது, ஏற்படுத்தி தர வேண்டிய பாதுகாப்பு மற்றும் வசதிகளை உறுதி செய்வதற்காக இந்த நாள் கடைபிடிக்கப்படுகிறது.

உலகம் முழுவதிலும் வாழும் மகளிர், பல நேரங்களில் சவால் நிறைந்த சூழ்நிலைகளில் வாழவேண்டியுள்ளதால், மாதவிடாய் காலங்களின்போது, அவர்களது ஆரோக்கியத்தை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உலக நாடுகளுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

போர், கலவரம், கட்டுமானம், ஆரோக்கியமற்ற சூழலில் பணிபுரியும் மகளிருக்கு ஆரோக்கியத்தை உறுதி செய்ய வேண்டியது அவசியம் என்பதை வலியுறுத்துவதற்காகவே இந்த நாள் கடைபிடிக்கப்படுவதாக மத்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

>>>><<<<

பப்புவா நியூகினியாவில் உள்ள மலைப்பகுதிகளில் கனமழை பெய்து வருவதை அடுத்து, தொடர்ந்து நிலச்சரிவுகள் ஏற்பட்டு வருகிறது.

பாதிப்பு ஏற்படக்கூடிய பகுதிகளில் வாழும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

பல பகுதிகளில் ஏற்பட்ட நிலச்சரிவால் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

பாதிப்பு ஏற்பட்ட பகுதிகளில் மீட்புப் பணிகளை மேற்கொள்வதில், சிரமம் ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், பப்புவா நியூகினியாவில் ஏற்பட்ட பேரிடரில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளார்.

துயரமான இந்த நேரத்தில் இந்திய மக்கள் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு துணை நிற்பதாக அவர் கூறியுள்ளார்.

காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய தாம் பிரார்த்திப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இயற்கை பேரிடரால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள இந்தியா ஆதரவு அளிக்கும் என்றும் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

>>>><<<<

தமிழகத்தின் தென்கடலோரப் பகுதிகளில் அடுத்த 3 நாட்களுக்கு அவ்வப்போது மழை பெய்யக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் மணிக்கு 45 முதல் 55 கிலோமீட்டர் வேகத்தில் காற்று வீசக்கூடும் என்பதால், மக்கள் பாதுகாப்பாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

வடக்கு ஆந்திரக் கடலோரப் பகுதிகளில் நாளை மறுநாள் சூறாவளிக் காற்று வீசக்கூடும் என்பதால், மீனவர்கள் கடலுக்கு செல்ல வேண்டாம் என்றும் வானிலை ஆய்வு மையம் அறிவுறுத்தியுள்ளது.

>>>><<<<

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள மணிமுத்தாறு பகுதிகளில் மழை குறைந்திருப்பதை அடுத்து, அங்கு குளிப்பதற்கு தடை விலக்கப்பட்டிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - திருமலைக்குமார் 36 செகண்ட்ஸ்)

>>>><<<<

பாரிஸில் நடைபெற்று வரும் பிரெஞ்ச் ஓப்பன் டென்னிஸ் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் ஆட்டத்தில் இந்தியாவின் ரோஹன் போபண்ணா - ஆஸ்திரேலியாவின் மேத்யூ எப்டன் இணை, ஃபின்லாந்தின் **Emil Ruusuvuori** மற்றும் ஹங்கேரியின் **Marton** இணையை எதிர்கொள்கிறது.

மற்றொரு ஆட்டத்தில் இந்தியாவின் யூகி பாம்ரி – பிரான்ஸின் **Albano Olivetti** இணை – ரஷ்யாவின் **Roman Safiullin –** ஆஸ்திரேலியாவின் **John Peers** இணையை எதிர்கொள்கிறது.

>>>>**END**<<<<